DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.16/2026

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | செல்வி (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 14.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், ஈ.பி.காலனியில் குடியிருந்து வீட்டுவேலை செய்து வருகிறேன்.

தேதி நினைவில் இல்லை. கடந்த வருடம் 9 வது மாதத்தில் ஒரு நாள் காலை சுமார் 06.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது அப்பா மணிக்கு எல்லிபாளையம் போயர் தெருவில் சாலைவிபத்து ஏற்பட்டதாகவும், பின்னர் அவரை நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் தகவல் வந்தது. நான் உடனே நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று எனது அம்மாவிடம் விசாரித்தபோது அன்றைய தினம் 05.15 மணியளவில் வீட்டில் இருந்து கிழம்பி டீ கடைக்கு செல்வதற்காக அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக சென்றுகொண்டிருந்தபோது அதே திசையில் TN 28 BF 8841 பதிவெண்கொண்ட ஸ்கூட்டி வண்டியில் வந்த எதிரி எனது அப்பாவின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறினார். எனது அப்பாவிற்கு கழுத்து, தலை, வாய் ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் மருத்துவமனையில் பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை

எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்தது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் நேரில் பார்க்கவில்லை கேமராவில் பார்த்தேன். கேமராவை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் போலிசார்தான் எங்களுக்கு காட்டினார்கள். மேற்படி கேமரா யாருடையது எங்கு பொறுத்தப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**